"திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி தாலுகாவில், குடும்பக் கார்டு முறை அமுலில் இருந்தும் நகரப்புறங்களில் குறைந்த அளவிலும், கிராமங்களில் விநியோகம் முற்றிலும் நின்று விட்டதால், உணவு தானியம் கிடைக்காமல், மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறுர்கள் என்று தகவல் வந்துள்ளதால் சபையின் நடவடிக்கைகளே ஒத்திவைத்து விவாதிக்க" என்று தீர்மானம் கொண்டுவந்திருக்கிறுர்கள். இது அரசினரின் சாதாரண நிர்வாக இயந்திரத்திற்கு உட்பட்ட காரியம் என்ற காரணத்திஞல் அதற்காக அவையை ஒத்தி வைக்க தேவை இல்லை என்று கூறுகிறேன்.

3. அரசினர் தீர்மானம்.

41 (3) விதியைத் தளர்த்துதல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்தாற்போல, இன்று 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மூன்று உள்ளன. ஒரே நாளில் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு மேல் கொண்டு வருவதற்கு விதிகளிலே இடம் இல்லை. ஆகையால் மூன்று தீர்மானங்களைக் கொண்டுவருவதற்கு இந்தப் பேரவையின் விதியைத் தளர்த்தியாக வேண்டும். எனவே, மன்ற முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட விதியை இன்று மட்டும் தளர்த்தவேண்டு மென்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து அதை முன்னுரைப் பார்கள்.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 244-வது விதியின்கீழ், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்னுரைக்கிறேன் :—

"சட்டப் பேரவை விதிகளின் 41 (3)-வது பிரிவின்கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு மேற்பட்டு எழுப்பக் கூடாது என்றுள்ள விதியைத் தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

4. கவன ஈர்ப்பு

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கடன் தவணை வசூல் ஒத்திவைப்பு

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தலைவர் அவர்களே, 1966-ம் வருடம் பருவ மழைக் குறைவிஞல் திருநெல்வேலி ஜில்லாவில் செங்கோட்டை, தென்காசி, சங்கரன்கோவில் தாலுக்காக்களில் பயிர்கள் காய்ந்து சேதம் ஏற்பட்டதின் காரணமாக அங்குள்ள விவசாய மக்கள் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய பலவிதமான கடன் துறைகளின் தவணைத் தொகை ஒரு வருடத்திற்கு அரசாங் கத்தாரால் ஒத்திவைக்கப்பட்டது (ஜீ.ஓ. எம்.எஸ். நெ. 1162, ரெவின்யூ, 6—4—1966). இவ்வருடம் (1967-ல்) மேற்படி கடன்களை

1967 மார்ச் 30] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

வசூல் செய்வதற்காக சென்ற வருடம் செலுத்த வேண்டிய தவணைத் தொகை, தவணைப்படி கட்டாததற்கு விதிப்படி அபராதம், இந்த வருட தவணைத் தொகை ஆகியவைகளைச் செலுத்த வேண்டுமென டிமாண்ட் கொடுத்திருப்பதால், அங்குள்ள விவசாய் மக்கள் பெரிதும் இன்னலுற்றுள்ளனர். அதற்குத் தீர்வு காண வேண்டிய அவசியம் பற்றிய அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த விஷயத்தை மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன் : வருவாய்த் துறையின் 6—4—1966 தேதியுள்ள 1162-ம் எண் அரசாங்க ஆணையில், செங்கோட்டை, சங்கரன்கோயில், தென்காசி தாலுகாக்களில் 1374-ம் பசலிக்கு, கடன் தவணைகளையும் நிலவரியையும் வசூலிப் பதில் வலுக்கட்டாய நடைமுறையைப் பயன்படுத்தக் கூடாது என அரசாங்கம் திருநெல்வேலி கலெக்டருக்கு உத்தரவிட்டது. நிலைமை சீர்திருந்தியுள்ள போதிலும், ஏற்கெனவே நிலுவையா யுள்ள கடன் தவணைகளை வட்டியும் சேர்த்துக் கட்டுவதோடு நடப்புக் கடனின் தவணைகளையும் செலுத்துவதென்றால் குடியான வர்கள் இடர்ப்படுவர் என திரு. சுப்பையா முதலியார், எம்.எல்.ஏ. அவர்கள் அரசாங்கத்திடம் இப்பொழுது முறையிட்டுள்ளார். இது குறித்து திருநெல்வேலி கலெக்டருக்கு எழுதப்பட்டது. இந்த ஆண்டு நிலைமைகள் மிகத் திருப்திகரமாயுள்ளனவென்றும், குடியா னவர்கள் தங்களது கடன் பொறுப்புகளை அறுவடைக்குப் பின்னர் கூடிய விரைவில் கொடுத்துத் தீர்க்க இயலும் என்றும், இது குறித்து இன்னல்களேதும் இருப்பதாகப் பொது மக்களிடமிருந்து பொது வாக முறையீடு எதுவும் வரவில்லை என்றும் கலெக்டர் அறிவித் துள்ளார். எனவே, இந்த ஆண்டு கட்ட வேண்டிய நிலவரியையும், கடன் தொகையையும் குடியானவர்கள் தாங்களாகவே செலுத்த முடியுமென அரசாங்கம் நம்புகிறது. எனினும், சட்ட சபை உறுப்பினர் செய்துள்ள தனி முறையீட்டினைக் கருதி கடன் நிலுவைத் தொகையை வட்டியுடன் செலுத்தியுள்ள குடியான வர்கள் நடப்புக் கடன் தவணையைச் செலுத்த முடியாமற் போனால் அவர்களிடமிருந்து கடன்தொகைகளை வசூலிப்பதில் வலுக் கட்டாய நடவடிக்கைகள் எவற்றையும் இப்பொழுது மேற்கொள்ள வேண்டியதில்லை என அரசாங்கம் உத்தரவுகள் பிறப்பித்து வருகிறது.

(இ) "மை காப்பி பார்" உணவுச்சாலை கதவடைப்பு

திரு. எ. பாலசுப்பிரமணியன் : கனம் சபாநாயகர் அவர்களே, சட்ட சபை விதிகளின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கொண்டுவருகிறேன்.

தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னை மாநகரின் முக்கிய சாலை யான மவுண்ட்ரோட்டிலுள்ள "மை காப்பி பார்" ஓட்டல் முதலாளி ஓட்டலை மூடி, தொழிலாளிகளுக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான நஷ்டஈடுகளைக் கொடுக்க மறுத்து வருவதால்